மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம். 1-6-1970 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ ஓய்வு பெற்று அந்தக் கல்வி ஆண்டு 1970-71 முழுவதும் வேலை செய்த ஆசிரியர்களுக்கு இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின்படி மற்ற என்.ஜி.ஓ.-க்களைப் போல எல்லா ஓய்வு ஊதிய உயர்வும் அளிக்கப்பட்டுள்ளன.

1-6-1970-க்கும் 1-10-1970-க்கும் இடையில் ஓய்வு பெற்றவர்கள் இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரை செய்துள்ள உயர்தர சம்பளம் தவிர மற்ற எல்லாவிதமான ஓய்வு ஊதிய உயர்வும், இதர சலுகைகளும் அளிக்கப் பட்டுள்ளனர்.

DR. H. V. HANDE : Sir, may I know whether the minimum pension which was increased to Rs. 40 per month to other persons will be applicable to the teachers also? If so, whether that will be given retrospective effect? May I know all the details?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பென்ஷன் தொகையை ரூ. 30-லிருந்து ரூ. 40 ஆக உயர்த்தியிருக்கிறோம். அது எல்லாப் பணியாளர்களுக்கும் பொருந்தும்.

ஆசிரியரல்லாத இதர ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

* 895 வினா—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத இதர ஊழியர்களுக்கும் ஓய்வு கால ஊதியமளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடமுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

Ambattur Township Washermen Association.

* 896 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether any representation has been made to the Government by Ambattur Township Washermen Association during the last year for allotment of place to erect a statue of Mr. M. Ethirajulu, Ex. M.L.C., and leader of that Community in Tamil Nadu; and

(*b*) if so, the action Government has taken in this regard?

1972 ஏப்ரல் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை

(இ) இக் கேள்வி எழவில்லை.

இருத்திபட்–மங்கசால் சாலை

*897 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்கா மூனநாடு பொதுமக்களிடமிருந்து, இருத்திபட்-மங்கசால் பாதையை மெட்டல் பாவி தார் போடும்படி கோரி 25-5-71-ஆம் நாளிட்ட முறையீடு ஒன்று வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

சைக்கிள் வரி ரத்து

*898 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாநகராட்சியில் சைக்கிள் வரி ரத்து செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1-4-1972 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மதுரை மாநகராட்சியில் சைக்கிள் வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போன்று மாநிலம் முழுவதும் சைக்கிள் வரியைச் சுமத்தக் கூடாது என்ற சட்டத்தை அரசாங்கம் எல்லா லோக்கல் பாடீஸுக்கும் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாநிலம் முழுவதும் அரசாங்கம் சைக்கிள் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க அவசியம் இல்லை. ஆங்காங்கே சைக்கிள் வரியை வசூல் செய்வதில் பெரிய நகராட்சிகளுக்கு பல சிரமங்கள் இருக்கின்றன. வரியை விட வரியை வசூலிப்பதற்கு செலவு அதிகமாகக் கூடிய நிலை ஏற்படுவதாகச் சொல்லப் படுகிறது. அப்படிப்பட்ட நகராட்சிகளில் சைக்கிள் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பினல் அரசு அதற்கு அனுமதி அளிக்கிறது. பேரூராட்சிகள் இந்த வருமானத்தை இழக்க விரும்பவில்லை. ஆகவே, எந்தெந்த நகராட்சிகள் தீர்மானம் போட்டு அனுப்புகின்றனவோ அவைகளுக்கு மட்டும் அரசாங்கம் அனுமதி அளிக்கிறது